1990 மார்ச் 29]

உப்பு இரசாயணத் தொழில்

*3241. திரு. ஜி. பழனிச்சாமி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொற்கையில் உப்பு இரசாயன தொழிற்சாலை தொடங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே,

(அ) சிதம்பரனார் மாவட்டத்தைச் சார்ந்த கொற்கையில் உப்பு இரசாயனத் தொழிற்சாலை தொடங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உப்பு இரசாயனத் தொழிற்சாலையைத் துவங்குவதற்கு தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டியிலே உள்ள கொற்கை என்ற இடத்திலே ஜனதா கட்சி ஆட்சியிலே இருந்த போது, இடம் பார்க்கப்பட்டு, அளவீடு செய்யப்பட்டது. அங்கே துவங்குவதற்கான வாய்ப்புகள், இடம், பரப்பளவு எல்லாம் இருக்கிறது. கோடியக்கரையிலே உப்பு இரசாயனத் தொழிற்சாலையைத் திறந்தால், அங்கேயிருக்கக்கூடிய பறவைகள் சரணாலயத்திற்குப் பாதிப்பு வரும் என்று இந்த இடத்தைப் பார்த்தார்கள். ஆகவே, இதைச் செய்வதற்கு அரசிடம் உத்தேசம் இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, கேள்வி சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த கொற்கையைப் பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த கொற்கை என்று குறிப்பிடுகிறார். மூலக் கேள்வியிலே உள்ள சிதம்பரனார் மாவட்டத்தைச் சேர்ந்த கொற்கையில் பெரும்பகுதி அங்கேயுள்ள விவசாயத்திலே ஈடுபட்டுள்ள மக்கள்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நெல், வாழை, வெற்றிலை, பனை, தென்னை ஆகியவற்றை மக்கள் அங்கே வளர்த்து அதன் மூலமாக பயன்பெறுகிறார்கள். எனவே அங்கே உப்புத் தொழிற்சாலை ஏற்படுவதற்கான வாய்ப்புக் கூறுகள் இல்லை என்று நான் குறிப்பிட்டு இருக்கிறேன். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வேதாரண்யம் பகுதியிலே இதுபோன்ற முயற்சிகளை அரசு இப்பொழுது மேற்கொண்டு இருக்கிறது.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் தஞ்சை மாவட்டத்தைத்தான் குறிப்பிட்டு எழுதிக் கொடுத்து இருந்தேன், வேறு மாவட்டத்தைப் பற்றி எழுதிக் கொடுக்கவில்லை. ஆனாலும் இப்படி கேள்வி வந்திருக்கிறது. ஆகையினாலே, தஞ்சை மாவட்டத்திலே, உப்பு இரசாயனத் தொழிற்சாலை துவங்கப்படும் என்று சொன்னால், எப்போது துவங்கப்படும், எவ்வளவு ரூபாயிலே திட்டம் ஆரம்பிக்க அரசுக் குறிப்பிலே இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் இரண்டு திட்டங்கள். Caustic Soda plant திட்டம் 'டிட்கோ' மூலமாக ஆரம்பிக்கப்பட பரிசீலனைகள் நடைபெற்று வருகின்றன. 65 கோடி ரூபாய்த் திட்டமாக இது இப்போது பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

மற்றொரு திட்டம் வேதாரண்யத்தில் Marine Complex, Iodite உப்பு, சுத்தி கரிப்பு உப்பு என்ற அந்த இரண்டு உப்புகளும் இதனுடைய கழிவுப் பொருள்களிலேயிருந்து 'பொட்டாசியம் ஐயோடைடு, மற்றும் குரோமைட்' என்கிற பொருள்களைத் தயாரிப்பதற்கு 15 கோடி ரூபாய் அளவிலே திட்டமிடப்பட்டு இருக்கிறது. தூத்துக்குடியில் ஆல்காலிக்ஸ் கெமிக்கல்ஸ் மூலமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு பரிசிலிக்கப்பட்டு வருகிறது.

9-10 மணி

திரு. கா. அண்ணாதுரை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம் கடற்கரை நகரமாக இருக்கக்கூடிய அதிராம்பட்டினத்திலே மிகப் பெரிய அளவிலே இன்றைக்கு உப்பு உற்பத்தியாகிறது. எனவே அங்கே ஒரு இரசாயன உப்புத் தொழிற்சாலை ஆரம்பிக்க நம்முடைய முதல்வர் அவர்கள் கனிவோடு பரிசீலிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, முதலில் இப்போது தொடங்க உத்தேசித்துள்ள வேதாரண்யம் பகுதியில் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்ட பிறகு அதிராம்பட்டினத்திற்கு அடுத்து வரலாம்.